செ.வெ.எண் - 45 நாள்: 24.09.2019

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய விமானப்படை மூலமாக Education Instructor Trade என்ற பணிக்காலியிடத்திற்கு தகுதிவாய்ந்த **ஆண் மனுதாரர்களை மட்டும்** தேர்வு செய்வதற்கான முகாம் கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 17.10.2019 முதல் 25.10.2019 வரை நடைபெறவுள்ளது. இதற்கான கல்வித்தகுதி பின்வருமாறு:-

**<u>கல்வித்தகுதி</u>**

இளங்கலை பட்டப்படிப்பில் ஆங்கிலத்தினை ஒரு பாடமாக கொண்டு தேர்ச்சி பெற்றவர்கள் அல்லது இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பில் இயற்பியல்/உளவியல்/ வேதியியல்/கணிதம்/கணினி அறிவியல்/தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றில் 50% மதிப்பெண்களுடன் பட்டதாரி ஆசிரியர் கல்வித்தகுதியில் 50% மதிப்பெண்களுடனும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

முதுகலை ஆங்கிலம் அல்லது முதுகலை அறிவியல் பட்டப்படிப்பில் கணிதம்/ இயற்பியல்/கணினி அறிவியல்/புள்ளியியல்/MCA ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றில் 50% மதிப்பெண்களுடன் பட்டதாரி ஆசிரியர் கல்வித்தகுதியில் 50% மதிப்பெண்களுடனும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேற்காணும் இளங்கலை / முதுகலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் கல்வித்தகுதிகள் அனைத்தும் UGC அல்லது NCTE ஆகிய ஏதாவது ஒன்றால் அங்கீகரிக்கபட்டிருக்க வேண்டும்.

**<u>வயது வரம்பு</u>**

இளங்கலை பட்டப்படிப்புடன் பட்டதாரி ஆசிரியர் கல்வித்தகுதியுடைய ஆண் மனுதாரர்கள் 19.01.1995 முதல் 01.07.2000 தேதிக்குள் பிறந்தவர்கள் தகுதியுடையவர்களாவர்.

முதுகலை பட்டப்படிப்புடன் பட்டதாரி ஆசிரியர் கல்வித்தகுதியுடைய ஆண் மனுதாரர்கள் 19.07.1992 முதல் 01.07.2000 தேதிக்குள் பிறந்தவர்கள் தகுதியுடையவர்களாவர்.

இப்பணிக்காலியிடங்களுக்கான கல்வித்தகுதி, வயது வரம்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களும் www.airmenselection.cdac.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரி co.8asc.tn@gov.in மேலும் கூடுதல் விவரங்களுக்கு 044-22396565 அல்லது 94448-53551 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்திய விமானப்படை மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள Education Instructor Trade பணிக்காலியிடங்களுக்கான நேர்காணல் மற்றும் இதர தேர்வுகளில் கலந்து கொள்ளவுள்ள அனைத்து மனுதாரர்களும் பயன்பெறும் வண்ணம் வருகின்ற 26.09.2019 அன்று காலை 10.00 மணிக்கு திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்காலியிடத்திற்கு தகுதியுள்ள மனுதாரர்கள் அனைவரும் இவ்விழிப்புணர்வு முகாமில் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**